
www.padippakam.com



# தேர்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறி முறைகள்


படிப்பகம்

www.padippakam.com

பதிப்பு
சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு [PAFFREL]
மற்றும்
சுதந்திரமானதும் நிதியானதுமான தேர்தல்களுக்கான இயக்கம் [MFFE]
93/10 துட்டகைமுனு வீதி, கொழும்பு 06.

படிப்பகம்

www.padippakam.com R. Suthon vellavely



# தேர்தலின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறி முறைகள்

தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள், தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள், வாக்காளர்கள், தேர்தல் அவதானிப்பாளர்கள் ஆகிய அனைவரும் தமது கடமைகளைச் செய்யும்போதும், அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போதும் சட்டத்திற்கு விசுவாசமாக நடப்பதாகவும், நீதியான சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்தத் தம்மை அர்ப்பணிப்பர் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றனர்.

இக் குறிக்கோளை அடைவதற்கு பூரண ஜனநாயக சமூகங்களின் முன்னுதாரணங்களையும், சாசனங்களையும், அமுல்படுத்துவர். எமது நாட்டில் நிலவும் முக்கிய மதங்களின் விழுமியங்களையும், ஒழுக்க நெறிமுறைகளையும் ஏற்றுக் கொள்வர். பண்டைய 'தசராஜ' தர்மத்தில் (10 நன்னெறிகள்) குறிப்பிடப்படும் நல்லாட்சி பற்றிய தொலை நோக்கையும் தமது வழிகாட்டியாக ஏற்றுக் கொள்வர்.



படிப்பகம்


# சகல அரசியல் கட்சிகளும் குழுக்களும் இவ்வாறு உறுதியளிக்கின்றன:

- சட்டத்தின் ஆதிக்கத்தின் மீது முழுமையான நம்பிக்கை வைக்கின்றோம். தேர்தலுக்கு முன்னரோ, தேர்தலின் போதோ, தேர்தல் தினத்தன்றோ அல்லது தேர்தலின் பின்னரோ எவ்வகையிலான வன்முறையையோ அச்சுறுத் தலையோ அல்லது துன்புறுத்தலையோ பயன்படுத்த மாட்டோம்.



- வன் செயல்கள், அச்சுறுத்தல்கள், தேர்தல் சட்டங்களை மீறுதல் என்பவற்றைத் தடுப்பதற்கு கட்சி அங்கத்தவர் களிடையேயும், ஆதரவாளர்களிடையேயும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மேற்படி நபர்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கி வைப்போம்.

- மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக் கப்படும் பிரதிநிதிகள் நேர்மை யானவர்களாயிருத்தல் வேண்டும்; ஆற்ற லுடையவர்களாயிருத்தல் வேண்டும். தேர்தல் பிரசார அரசியல் நடவடிக்கைகளின்போது வன்முறை, பலாத்காரம், அச்சுறுத்தல் என்பவற்றைப் பயன்படுத்துவோரை நீக்குவதற்கும் உறுதி கூறுகின் றோம்.



- எதிர்க்கட்சிகளைச் சார்ந்த வாக்கெடுப்பு நிலைய முகவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும், அவர்களின் சட்டபூர்வமான நடவடிக்கைகளைத் தடை செய்யாது இருக்கவும் நாம் பொறுப்புக் கூறுகின்றோம்.

- பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கவனஞ் செலுத்தவும் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்தாமல் இருப்பதற்கும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளை சமாதானமாகவும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடனும் நடத்த உறுதி செய்கின்றோம்.

- இன ரீதியாகவோ மதரீதியாகவோ பகைமை ஏற்படும் வகையிலும், வன்முறை, வைராக்கியம், குரோதம் ஏற்படும் வகையிலும் செயற்பட மாட்டோம், என உறுதி கூறுகின்றோம்.

- பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தும் போதும், சுவரொட்டிகள், பதாகைகள் என்பன காட்சிக்கு வைக்கும் போதும் தேர்தல் சட்டங்களுக்கு இணங்கி நடப்போம்.

- தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சுவரொட்டிகள், அலங்காரங்கள், ஊர்வலங்கள், வீடுவீடாகச் செல்லுதல், ஆகிய நடவடிக்கைகளின்போது தனியார் உடைமை களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாமல் இருக்கவும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாமல் இருக்கவும் உறுதி கூறுகின்றோம்.

- வாக்காளர்களின் உரிமைகளைக் காக்கவும், கள்ள வோட்டுப் போடுதல், நியாயமற்ற செல்வாக்குச் செலுத்துதல், ஊழல் மோசடி நடவடிக்கைகள் என்பவற்றைத் தவிர்க்கவும், உறுதி செய்கின்றோம்.



- தேர்தல் தினத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அருகே ஆதரவாளர்கள் சகிதம் கூடி நின்று வாக்காளர்களை அச்சுறுத்தல், இடையூறு விளைவித்தல், அவர்களின் சுதந்திரத்திற்கு தடை விதித்தல் என்பவற்றைத் தவிர்ப்போம்.

- நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குதல், தேர்தல் தொடர்பான வன்முறைகளுக்கும் சட்ட ஒழுங்கு மீறல்களுக்கும் எதிராக நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு பொலிசாருக்கும் தேர்தல் உத்தியோகத் தர்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

- தேர்தல் தொடர்பான போட்டிக் கட்சிகளிடையே ஏற்படக் கூடிய பிரச்சினைகள், பிணக்குகள் என்பவற்றைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் களின்போதும் கருத்துக் கணிப்புக்களின்போதும் பங்காளர்களாகச் செயற்படுவோம்.

www.padippakam.com

**வாக்காளர்களாகிய நாம் இவ்வாறு உறுதி கூறுகின் றோம்.**

- ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கு தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் செயற்படுவோம்.

- வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கு அவசிய மான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள் வோம். தேர்தல் தினத்தில் வாக்களிப்பது தொடர்பாகத் தேவையான சகல விடயங்களையும் வாக்காளர்களுக்கு அறிவிப்போம்.

- வாக்காளர்கள் எக் கட்சிக்கு ஆதரவளித்தாலும் வன்செயல்கள், அச்சுறுத்தல்கள் கள்ளவோட்டுப் போடுதல் என்பவற்றைப் பகிரங்கமாகக் கண்டிக்கின் றோம்.

- நாம் ஆதரவு வழங்கும் கட்சியாயிருப்பினும், ஓர் வேட்பாளர் வன்முறை அரசியலில் ஈடுபட்டால் நாம் அவருக்கு விருப்பு வாக்கை வழங்காமல் இருக்கத் திடசங்கற்பம் செய்வோம்.

- எவ்வகையிலேனும் இன்றைய அரசியல் வன்முறைக்கு எதிராகப்பொது மக்களுக்கு அறிவூட்டல், வன்முறைக்கு எதிரான கருத்தியலை உருவாக்கி மேம்படுத்தல் மூலம் போலியற்ற ஜனநாயக அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்போம்.

- வன்முறையை ஒழித்து சுதந்திரமானதும் நீதியானது மான தேர்தலை நடாத்துவதற்கு சமுகத் தலைவர்கள் எடுக்கும் பிணக்குத் தீர்க்கும் நல்லெண்ண முயற்சி களுக்கு ஒத்துழைப்பு நல்குவோம்.


- கட்சிசார்பற்ற சிவில் சமூக ஸ்தாபனங்கள் தேர்தலை அவதானிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத் துழைப்பு வழங்குவோம்.



படிப்பகம்

## தேர்தல் அவதானிப்பாளர்கள் இவ்வாறு உறுதி கூறுகின்றனர்.

- தேர்தலை அவதானிக்கும் போதும் அது பற்றிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போதும் மிக நேர்மையுடனும் நடுநிலையுடனும் செயற்படுவோம்.



- தேர்தலுடன் தொடர்புடைய ஊழல், மோசடி, வன்செயல்கள் என்பவற்றைத் தடுப்பதற்காக மக்களுக்கு அறிவூட்டல், சமூகப் பங்கேற்றல் என்பவற்றை மேம்படுத்துவோம்.

- நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தல் ஒன்றிற்கு அவசியமான தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் போட்டிக் கட்சிகள் - குழுக்கள் என்போரிடையே கூட்டிணைப்பை ஏற்படுத்துவோம்.

- வாக்காளர்களின் உரிமைகளைக் காப்பதற்கும் அவற்றைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கும் சகல வழிகளிலும் உதவுவோம்.



- தமது அவதானிப்புக்கு உட்படுத்தப்படும் சகல சட்ட மீறல்களையும் உரிய அதிகாரிகளுக்கு முறையீடு செய்து அவற்றிற்கு உரிய கவன ஈர்ப்பு கிடைக்கின்றதா எனவும் கண்காணிப்போம்.

- தமக்குக் கிடைக்கும் முறையீடுகள் தகவல்கள் பற்றிய உண்மை நிலையை ஆராய்ந்து தேர்தல் ஊழல் - மோசடி - வன்செயல்கள் பற்றித் துரிதமாக ஊடகங்களுக்கும் மக்களுக்கும் அறிவிப்போம்.



படிப்பகம்

## ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறி முறைகள்

- ஆட்சி அதிகாரத்திலுள்ள கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது அரச உபகரணங்கள், வாகனங்கள், தனிநபர்கள், மற்றும் ஊடகங்களைப் பயன்படுத்த மாட்டோம்.

- ஆட்சி அதிகாரத்திலுள்ள கட்சி தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் பொருட்டு மறைமுகமாக அரச விழாக்களையும், திறப்பு விழாக்களையும்,அரச செய்திட்டங்களையும் ஆரம்பித்து அமுல்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வோம்.



- தேர்தல் நடவடிக்கைகளின்போது போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் நியாயமான சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படு வதை உறுதிசெய்வோம்.

- அரச ஊழியர்கள் தமது கடமைகளைப் பாரபட்சமற்ற முறையில் செய்வதனைத் தடுக்கக் கூடிய வகையில் அரசியற் காரணங்களைக் காட்டி அரச ஊழியர்களை இடமாற்றம் செய்வதையும், நிர்வாக நிறை வேற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் தவிர்ப்போம்.



- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொலிசாருக்கும் மற்றும் தேர்தல் ஆணையாளருக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம்.

**தேர்தல் கடமைகளில் ஈடு படும் அரச உத்தி யோகத் தர்களும் (நிர்வாக/மற்றும் பொலிஸ் உத்தியோகத் தர்களும்) இவ்வாறு உறுதி செய்கின்றனர்.**



- தேர்தலில் போட்டியிடுகின்ற எந்தவொரு அரசியற் கட்சிக்கோ அல்லது குழுவிற்கோ சார்பாக நடந்து கொள்ளாது கடமையில் ஈடுபட்டவாறு சட்டங்களை உரிய முறையில் செயற்படுத்துவோம்.

- வாக்காளர்கள் சுதந்திரமாகத் தமது வாக்கைப் பாவிக்கக்கூடிய வகையில் வாக்குச் சாவடியின் உள்ளேயும் வெளியேயும் வாக்காளரின் உரிமை களைக் காப்போம்.



- வன் செயல்களுக்கு எதிராக துரிதமாகச் செயற்படுவோம். ஏனைய தேர்தல் சட்ட மீறல்களுக்கு எதிராகவும் தாமதமின்றி உடனடியாகச் செயற்படுவோம்.

## தசராஜ தர்மங்கள்
## சிறந்த நல்லாட்சிப் பண்புகள்

"அதன் பின்னர் அவரது புதல்வர் மேதகு புத்ததாஸர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். சகல மாணிக்கங்களாலும் சமுத்திரம் எவ்வாறு நிரம்பி உளதோ அவ்வாறே இவரும் சிறந்த பண்புகளைக் கொண்டவராக ஆட்சி செலுத்தினார். அறிவாலும் புண்ணிய மகிமையாலும், அன்பினாலும் நிரம்பப் பெற்ற அவர் ஆட்சியாளனுக்கு உரித்தான பத்து வகைப் பண்புகளுடன் பூரணத்துவம் வாய்ந்த ஆட்சியினை புத்ததாஸர் நடத்தினார் ஆட்சியின் தவறான வழிகள் நான்கினைத் தவிர்த்து மக்களின் உள்ளங்களைக் கவரும் வகையில் நல்லாட்சி செலுத்தினான்.

dana கொடுப்பதும் பங்கிடுவதும்
ajjava நற்செயல்
sila நன்னடத்தை
maddawa சாந்த குணம்
tapas தன்னடக்கம்
akkodha கோபமின்மை
avihimsa அகிம்சை
kkanti பொறுமை/அமைதி
arorodha விரோதமின்மை

2. chanda கொடூரமான
dosa வைராக்கியம்/வெறுப்பு
bhaya அச்சம்/பயம்

3. dana கொடை
peyyavajja நட்புமொழி
attacharya தருமம்/நற்செயல்
samanatatta இணக்கப்பண்பு

சூலவம்சத்தின் 37வது அத்தியாயத்தின் 105–109 வரையிலான பாடல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

## தசராஜ தர்மங்கள்
## சிறந்த நல்லாட்சிப் பண்புகள்

"அதன் பின்னர் அவரது புதல்வர் மேதகு புத்ததாஸர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். சகல மாணிக்கங்களாலும் சமுத்திரம் எவ்வாறு நிரம்பி உளதோ அவ்வாறே இவரும் சிறந்த பண்புகளைக் கொண்டவராக ஆட்சி செலுத்தினார். அறிவாலும் புண்ணிய மகிமையாலும், அன்பினாலும் நிரம்பப் பெற்ற அவர் ஆட்சியாளனுக்கு உரித்தான பத்து வகைப் பண்புகளுடன் பூரணத்துவம் வாய்ந்த ஆட்சியினை புத்ததாஸர் நடத்தினார் ஆட்சியின் தவறான வழிகள் நான்கினைத் தவிர்த்து மக்களின் உள்ளங்களைக் கவரும் வகையில் நல்லாட்சி செலுத்தினான்.


1. dana கொடுப்பதும் பங்கிடுவதும்
   ajjara நற்செயல்
   sila நன்னடத்தை
   maddawa சாந்த குணம்
   tapas தன்னடக்கம்
   akkodha கோபமின்மை
   avihimsa அகிம்சை
   kkanti பொறுமை/அமைதி
   avorodha விரோதமின்மை

2. chanda கொடூரமான
   dosa வைராக்கியம்/வெறுப்பு
   bhaya அச்சம்/பயம்

3. dana கொடை
   peyyavajja நட்புமொழி
   attacharya தருமம்/நற்செயல்
   samanatatta இணக்கப்பண்பு

சூலவம்சத்தின் 37வது அத்தியாயத்தின் 105–109 வரையிலான பாடல்களிலிருந்து இருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

www.padippakam.com



Sponsored by

Japan
Official Development Assistance

படிப்பகம்